விஜயாவின்
குணசுந்தரி
தமிழ்
டைரக்ஷன்:
கே. காமேஸ்வர ராவ். பி.ஏ.,
தயாரிப்பு:
நாகிரெட்டி • சக்ரபாணி

கதை ... பி. நாகேந்திர ராவ்

வசனம், பாடல்கள் ... தஞ்சை ராமய்யா தாஸ்

ஒளிப்பதிவு ... மார்க்கஸ் பார்ட்லே

ஒலிப்பதிவு இஞ்சினீயர் ... ஏ. கிருஷ்ணன் பி.ஏ.

பிரோசஸிங் ... சென்குப்தா, பி.எஸ்ஸி.

உதவி ஒலிப்பதவு இஞ்சினீயர் வி. சிவராம் பி.ஏ.,பி.எஸ்ஸி.

இசை அமைப்பு ... கண்டசாலா

ஆர்க்கெஸ்ட்ரா : ... ஏ. கிருஷ்ணமூர்த்தி

கலை அரங்க நிர்மாணம் ... கலாதர்

நடனம் ... பி. கிருஷ்ணமூர்த்தி

எடிட்டிங் ... ஜம்புலிங்கம்

மேக்கப் ... பீதாம்பரம்

புரொடக்ஷன் நிர்வாகம் ... சலபதி ராவ்—ஜகந்நாத்

டைரக்ஷன் :

கே. காமேஸ்வர ராவ், பி. ஏ.

மேற்பார்வை :

கே. வி. ரெட்டி, பி.எஸ்ஸி. ஆனர்ஸ்

தயாரிப்பு :

நாகிரெட்டி : சக்ரபாணி

குணசுந்தரி பாடல்களை எச். எம். வி. கொலம்பியா
இசைத்தட்டுகளில் கேளுங்கள்.

குணசுந்தரி

கதைச் சுருக்கம்

புண்ணிய பூமியிலே :

கண்ணீரைக் காணிக்கை செய்கின்றாளே அந்தப் புனிதவதி காரணம் என்னவென்று சக்தி கேட்க, சிவன் சொல்லுகிறார்.

தாரா நகரத்திலே :

தன் நிலைமறந்து ஆட்சி புரிந்து வந்தான் மன்னன் உக்கிரசேனன். முறையே ரூபசுந்தரி, ஹேமசுந்தரி, குணசுந்தரி என்ற மும்மணிகளைப் பெற்றுக் கண்மணிகளைப் போல் காப்பாற்றி வந்தான்.

தன் ஷஷ்டி பூர்த்தி விழாவிலே :

உக்கிரசேனன் தன்மருமக்கள் அரமதி காலமதி, மற்றும் சபையோருமிருக்க, தன் பெண்கள் தன்னையே உயர்வாக நேசிக்கிறார்களென்று, தற்புகழ்ச்சியுடன் பேசுகிறான். காரியவாதிகளான மூத்த பெண்கள் இருவரும், தன் தந்தைதான் சர்வமுமென ஆமோதிக்கிறார்கள். ஆனால், இளையவள் குணசுந்தரி மணமாகும்வரை தந்தையே சர்வமுமானாலும், மாலையிட்ட பிறகு மணவாளனே சர்வமுமென்கிறாள். சினங்கொண்டு மன்னன் குணசுந்தரிக்கு அங்கஹீனமுள்ள ஒருவனைக் கணவனாக்க திட்டமிடுகிறான். ஆண்டவன் கட்டளை அப்படியானால், அதுவும் இஷ்டமே என்கிறாள் குணசுந்தரி.

உருமாறும் வித்தையிலே :

சாமர்த்தியமுள்ள வீரசேனன் என்ற அரசகுமாரன், இச்செய்தியைக்கேள்வியுற்று சர்வ அவலக்ஷணை, அங்கஹீனமுள்ள தெய்வாதீனமாக மாறி, குணசுந்தரியை மணம் செய்துக்கொள்கிறான். தெய்வாதீனம் ஒரு நாள் வேடிக்கையாக பாடிக்கொண்டிருப்பதைக் கண்ட அரசன் அவனை அடிக்க, தானே விழுகிறான். கால் முறிகிறது. தெய்வாதீனமும் குணசுந்தரியும் அரண்மனையைவிட்டு வெளியேற்றப்படுகிறார்கள். குடிசை வாழ்க்கையிலே நிம்மதியாய் குடும்பம் நடத்துகிறார்கள்.

அரண்மனையிலே :

படுக்கையிலிருந்த மன்னன், பல சிகித்சையிலும் குணமடையாமல் பரதவிக்க, மஹேந்திர பர்வதத்தில் உள்ள மஹேந்திர மணியால்தான் குணமாகுமென வைத்தியர் தெரிவிக்க, அந்த மணியைக் கொண்டு வருவோருக்கு, தன் அரசையே தத்தம் செய்வதாக அறிவிக்கப்படுகிறது. அரமதியும்காலமதியும் மணிக்காக மனைவியர்களால் விரட்டப்படுகிறார்கள்.

குடிசையிலே :

குணசுந்தரியின் பதிவிரதா தர்மத்தை பலமுறையும் பரீட்சித்த (வீரசேனன்) தெய்வாதீனம், தன் சுய சரிதையைக்கூறி, அதிலுள்ள ரகசியத்தை வெளியிட்டால், தான் நிரந்தரமாகக் கரடியாக நேருமென தெரிவித்து, தானும் மணிக்காக புறப்படுகிறான்.

பலவிதமான பரீட்சைகளிலே :

வெற்றிகண்ட தெய்வாதீனம் மணியை அடைந்து காளி கோவிலில் களைத்துறங்கும் சமயம், அவனை பாழுங்கிணற்றில் தூக்கி எறிந்துவிட்டு மணியுடன் ஓட்டம் பிடிக்கிறார்கள், அரமதியும் காலமதியும்.

ஆத்திரத்திலே :

தன் கணவனை இழிவாக, தன் சகோதரிகள் பேசியதைக் கேட்டு தன்னையறியாமல் ரகசியத்தை வெளியிடுகிறாள். தெய்வாதீனம் கரடியாக மாறுகிறான். கரடி உருவான கணவனைக் கண்ட குணசுந்தரி தன் தவறை உணர்ந்து கண்ணீரை காணிக்கை செய்கிறாள்.

கற்பரசி குணசுந்தரியின் கதி ?

கரடி உருவடைந்த கணவனின் விதி ?

கால் முறிந்த மன்னனின் மதி ?

காலமதி, அரமதியின் சதி !

என்னவானது என்பதை வெள்ளித்திரை விளக்கங் கூறும்.

ரூபசுந்தரி & ஹேமசுந்தரி :

தூது செல்லும் கோகிலம்—ஒரு
சேதி சொல்லக் கூவுதே.
காதல் யோகம் வந்ததாலே
கவிதை பாடி தாவுதே. [தூது]

உதய சந்திரிகை குமுதம் போலவே
உறவுதான் கொண்டாடுதே.
உலவும் தென்றல் அலையில் பிரேமை
ஓடமே மகிழ்ந் தோடுதே, [தூது]

மது நிலை மாராத மலர்மேல்
புது நிலை பெற வேண்டுதே.
மனதில் ஏதோ மறைந்து மாரன்
கணையைத் தூவிட தூண்டுதே, [தூது]

ரூபசுந்தரி & ஹேமசுந்தரி :

தாரகை சோலையிலே வெண்ணிலாவே—வீண்
ஜாலமே செய்யாதே நீ வெண்ணிலாவே. [தார]

ஜாடை செய்யலாமா—முகிலாடையணிந்த ராஜா
வெண்ணிலாவே—வெண்ணிலாவே—ஓ—வெண்ணிலாவே. [தா]

ரூபா : உள்ளமே கொள்ளை கொண்ட ஓவியமே வாடா
துள்ளுதே என் மனமே அமைதி காண வாடா.

ஹேமா : வெள்ளியன்னம் போலே—விளையாடிடவே வாடா
வெண்ணிலாவே-வெண்ணிலாவே-ஓ-வெண்ணிலாவே. [தா]

ரூபா : கண்மணியில் பவனிவரும்—விண்மணி உன்னாலே
காரிருள் நீங்குமடா—பாரினில் தன்னாலே

ஹேமா : காதல் ஜோதி நீயே—கலை வீசிடவே வாடா
வெண்ணிலாவே-வெண்ணிலாவே-ஓ-வெண்ணிலாவே. [தா]

சாமியார் :

ஆண்டவன்கட்டளையை மீற முடியுமா ?
மீறமுடியுமா ? அதை மாறமுடியுமா ?
அவனவன் இஷ்டம்போல் வாழமுடியுமா ?
(முடியாதப்பா—முடியாது)

இந்த உலகமே நாடக மேடையடா
இந்த உருவமெல்லாம் வேஷ தாரியடா

தற்பெருமை கொண்டவன் கெடுப்பாரன்றி
தானே கெடுவானடா
தானே அழிவானடா
அற்பமதியின் ஆணிவேராகும்
நான் எனும் அகந்தை யடா. [இந்த]

ஒளியான உருவத்தின் நிழலுமே
இருளாகக் காணுமடா
முறையான உண்மையடா—இதை
உணராமல் உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்று
பேசிடும் உலகமடா. [இந்த]

குணசுந்தரி :

உபகார குணநிதியாய் உருவானவளே மாதா
அபகார மெல்லாம் மறந்து
அருள் மேவிட வேண்டுமம்மா. [உப]

அறிவை மயக்கும் அகந்தையாலே
அறியாமையின் வேகத்தாலே
நெறியிலாமல் வாழுமாந்தர்
நேர்மைகாண வேண்டுமம்மா [உப]

என்னுளோ எவ்விடமோ
இன்னுடகமே—சமாப்தி
ஏழைமனதில் இருளை நீக்கி
வாழ்வினில் ஒளி வேண்டுமம்மா [உப]

குணசுந்தரி :

கற்பக பவானியே கருணையமுதே கௌரி
கல்யாண ஹாரதியின் கலையும் நீயே தேவி
குலதெய்வமே என்றுமே—இல்லமே
ஒளி வீசும் சுடர் தீபமே.

மலர்மேவும் எழில் திருவே
மனமேவும் நிழல் தருவே
ஏ கற்பக பவானீ
தெய்வீக நறுமணமே.
திகழுமே மலர்ப்பாதமே—இல்வாழ்வில்
திகட்டாத பேரின்பமே.

வானகமும் மானிலமும்
வணங்கும் மறைஜோதியே
ஏ கற்பக பவானீ
கருணை வாரிதியே
கனிந்திடும் இன்பநிலையே—இல்வாழ்வில்
கலி தீர்க்க வந்த தாயே—என்வாழ்வில்
கண்கண்ட தெய்வம் நீயே—அன்னையே
காணிக்கையும் ஹாரதியே.

தெய்வாதீனம் :

ஒஹோ ஒஹோ ஒஹோ ஹோ
பிரம்மதேவனே—அஹ—பிரம்மதேவனே
உன்பெருமையை நான் என்ன சொல்வேன் பிரம்ம தேவனே—நீ
பெரிய புத்திசாலியப்பா—பிரம்மதேவனே [ஒ]

பேருமில்லே ஊருமில்லே பிட்சாதிபதி என்னை
பிடிச்சி—அஹா—அடிச்சி
பிடிச்சி, அடிச்சி ராஜாமகளைத் தாலிகட்ட செய்தாய்
பெரிய இடத்தில் மாப்பிள்ளையாக பேரும் வாங்கிவச்சாய்
அஹா—என்ன வேலை செய்தாயப்பா பிரமமதேவனே [அஹா]

அடதெய்வமே—ஏ—ஏ—தோம் தரநனநனனு—
கோடைவெய்யில் தெரிஞ்சிடாத ராஜா பெற்ற செல்வமே
மூடனை எனக்கு சேத்துமுடிச்சு போட்ட தெய்வமே.
அட தெய்வமே என்ன எழுத்து எழுதினையோ பிரம்மதேவனே [அஹா]

தெய்வாதீனம் :

சிட்டி தாளம் ஜதி பாட்டை கேட்டதும்
தகர்தீம்—தகர்தீம்—தீ
சிட்டாகப் பறந்து கட்டாயம வரணும்
தகர்தீம்—தகர்திம்.

எந்த தேசத்து ராஜா நீங்க யாருங்க
நாதர் தீம்—நாதர் தீம்.
அதை—தெரிஞ்சிக்காமலே நெருங்கலாகுமா
நாதர் தீம்—நாதர் தீம்.

உடலும் உயிரும் ஒன்று பட்டதால்
ஊருபேரு என்ற பேதமாகுமா ?
கடலின் அலையை பிரிக்க முடியுமா ?
கண்ணான காதலி ராஜாத்தி [சிட்டி தாளம்]

களங்கமில்லாக் கடல் கரையைக்கண்டாலும
காதலுக்கே கரை காண முடியுமா ?
விளங்க முடியாத விடுகதையாலே
வித்தாரம் பேசிடும் ராஜாவே [எந்த]

தெய்வாதீனம் இப்படி யாச்சுது
சித்தம் ரெண்டுமே ஒத்து போச்சுது
செலலக்கண்ணாட்டி நல்ல பெண்டாட்டி
தேடக்கிடைக்காத ராஜாத்தி

சிட்டி தாளம் ஜதி பாட்டை கேட்டதும்
தகர்தீம் தகர்தீம்—நான்
சிட்டாகப் பறந்து கட்டாயம் வருவேன்
நாதர்தீம் நாதர்தீம்.

வீரபோகவசந்தராயன் :

கலையே உன்விழிகூட கவிபாடுதே—தங்கச்
சிலையே உன்நிழல்கூட ஒளி வீசுதே.
நிலவோடு விளையாடும் தாரா உன்னாலே
அலைமோதும் வேளை வாராய் முன்னாலே
அநுராக நிலையே பாராய் தன்னாலே [கலை]

இளங்காதல் அமுதாகும் ஏகாந்த ராணி
இசையோடு பாடும் வேதாந்த வாணி
இணையாருமிலையே எழில்மேவும் மேனி [கலை]

குணசுந்தரி :

ஆதாரமே உந்தன் பாதாரமே துளசி
மாதா என்குல தெய்வமே—தேவீ
வேதாந்த கலைவாணி
விமல கமல பாணி
விளங்கும் பர்வதராணி
தாயே நீயே [ஆதாரமே]

பிருந்தாவனமதில் விளங்கிடும் தாயே
பேதமிலா வாழ்வின் இன்பமும் நீயே
சதமன உனை நானே சரணம் புகுந்தேனே
தருணம் வந்தெனையாளும் தாயே நீயே [ஆதாரமே]

குணசுந்தரி & வீரசேனன்

குண : நான் செய்த பூஜாபலம்
நல்வாழ்வு எனைநாட இல்வாழ்வு கைகூட

வீர : இல்லை—நான் செய்த பூஜாபலம்
நல்வாழ்வு எனைநாட இல்வாழ்வு கைகூட

குணா : அரவிந்த மலரோடு அநுராக நிலைகாண
ஆதவன் உதயமானான்.

வீர : இல்லை—ஆதவன் ஒளியோடு காதலின் நிலைகாண
அரவிந்தம் உதயமானாள்.

குணா : தேன்மலர் மணம்போல தெய்வீகநிலைகாண
தென்றலும் உதயமானான்,

வீர : இல்லை—தென்றலின் அலையோடு தெவிட்டாத நிலைகாண,
தேன்மலர் உதயமானாள்.
நான் செய்த பூஜாபலம்

குணா : இல்லை—நான் செய்த பூஜாபலம்,

குணா : }
வீர : } இல்லை—நாம் செய்த பூஜாபலம்.

அரமதி & காலமதி :

லால லீல லூலலை லீலலூலலலாலலை
லல்லல்லாலா லில்லல்லை லில்லல்லாலா லுல்லல்லை—
அதுவே எதிரில் வருவதற்குள்ளே
அடடா நடடா அண்ணாத்தே

கால : கண்ணாளாவென ஊர்வசி வந்தால்
என்ன செய்வே சிப்பாயீ—நீ என்ன செய்வே சிப்பாயீ

அர : கண்ணானை என் பாட்டிக் கிழவியென
கன்னத்தில் கொடுப்பேன் அப்பாவி—நான்
கன்னத்தில் கொடுப்பேன் அப்பாவி

கால : ராச க்ரீடைக்கு ரம்பையெ வந்தால்
என்ன செய்வே சிப்பாயீ—நீ என்ன செய்வே சிப்பாயீ

அர : மீசயெ முறுக்கி ரோஷத்தெகாட்டி
மெரட்டித் தள்ளுவேன் அப்பாவீ—நான்
வெரட்டித் தள்ளுவேன் அப்பாவீ

கால : அப்போ-ஏழுமலைகளும் எதிரே நின்றால்
என்ன செய்வே சிப்பாயீ—நீ என்ன செய்வே சிப்பாயீ

அர : நான் ஏழுமலையானை கும்பிடு போட்டு
எகிறிச் செல்லுவேன் அம்பாவீ—நான்
எகிறிச் செல்லுவேன் அப்பாவீ [லால]

கால : காண்டா மிருகமும் வாழ்ந்திடும் காட்டில்
கரடி வந்தால் நீ என்ன செய்வே

அர : புலியை ஏவுவேன் அப்பாவீ நான் புலியை ஏவுவேன் அப்பாவீ

கால : புலியே வந்தால்

அர : பூனையெ—ஊஹூம்-யானையை விடுவேன்

கால : யானையெ வந்தால்

அர : சிங்கமிருக்குது

கால : அப்போ சிங்கமே வந்தால் என்ன செய்வே

அர & கால · பேபெ பேபெ பேபெ பே—
பெப்பெப்பெப்பெ பெப்பேப் பே.

சிங்காரி :

வாடா என்னைசக் கண்ணளனே—அருகில்
வாடா என்னைசக் கண்ணளனே
அஹஹ எந்தன் கண்ணளனே
இனிக்கும் கண்ணளனே. (வாடா)
அட கொக்கொரொ கொக்கோ சேவற் கோழீ
அட கிக்கிரி கிக்கீ நானே தோழீ.
நீயும் லபோ லபோ
அவனும் அம்போ அம்போ. [என்னைசை]

யக்ஷிணி :

ஜில் ஜில் ஜில் ராணி
புல் புல் புல் ராணி

வானம்பாடி போலே நான் கானம் பாடுவேன்
இன்ப—கானம் பாடுவேன்.

வண்ணக்கலாப மெனும் பெண்ணுளும் நானே.
பெண்ணைக் கண்டால் ரசிக்கும் கண்ணுக நானே
கண்ணைப் பறிக்கும் மின்னல் கலையாகினேனே ஒ— [ஜில்]

தென்றல் நிலாவில் கொஞ்சும் மலராகி நானே
தேன் மலர்மேல் தவழும மதுவாகி நானே
சிந்தும் மதுவில் கெஞ்சும் வண்டாகினேனே ஒ— [ஜில்]

பின்னணிப்பாட்டு :

ஆத்திரமே அறிவின் சத்ரு வென்றறியாமலே—உன்
நேத்திரத்தை உன்கரத்தாலே கெடுத்தாய் புரியாமலே
விதியா இது சதியா என நினையாதே நீ—உன்
மதியாலே நேர்ந்ததினுலே

பதியின் ஜீவிதமே பாலைவனம் போலே
பாய்மாமே இல்லாப் பட கானதாலே—எண்ணிப்
பாராமல் மாரானதே [விதி]

ஆதரவில்லாமல் கலங்குவதேனே
அலையின் துரும்பாகும் நிலையானதேனே—ஜெகன்
மாதா துணை புரிவாளம்மா. [விதி]

பரமசிவன் & பார்வதி :

ஹர ஹர ஹர ஹர உடுக்கையின் நாதம்
பர சிவ வேதம் பரம ரகசியம்
தெரிந்து கொள்ளுவீர்
தெரிந்து கொள்ளுவீர்

மண்ணும் விண்ணும் எதுவோ—நம்
கண்ணால் பார்ப்பது எதுவோ ?
மண்ணையும் விண்ணையும் புரிந்து கொள்ளாத
மானிடப்பிறவியின் ஆணவம் எதுவோ [தெரிந்து]

பகலுக்குப் பின்னே இரவு—அந்த
இரவுக்குப் பின்னே பகலாம்
பகலுக்கும் இரவுக்கும் பின்னால் எதுவோ
தக திமி தக திமி தத்தித் தரிகிட தோம் [தெரிந்து]

நெருப்பால் சூடான நீரு—அந்த
நெருப்பையே அணைக்கும்பாரு
நிதியானதோர் வேத வாக்கியமிது
நினைத்துப்பார்த்தாலே புரிந்து கொள்ளுவீர் [தெரிந்து]

வித்துக்கு முதலே விருக்ஷம்—அந்த
விருக்ஷத்தின் முதலே வித்து
வித்தா விருக்ஷமா முதல் எதுவெனவே
தத்துவம் தெரிந்த கரடிராஜனிவன் [தெரிந்து]

வீரசேனன், குணசுந்தரி முதலானவர் :

அம்மையே அப்பா அருட்பெரும் செல்வமே
ஆட்கொள்ளும் தெய்வம் நீயே
ஆதியும் அந்தமும் இல்லாத அண்ணலே
அகிலமே புகழ் எந்தையே,
இம்மையில் அடியார்கள் இதயத்தில் ஒளி வீசி
இன்னலை தீர்க்கும் தேவா
இகபர சுகந்தரும் ராஜ ராஜேஸ்வரீ
ஈஸ்வரா ! பரமேஸ்வரா !

பாஹிமாம் பாஹி பாஹி.

நடிகர்கள்

கணேஷ்	...	வீரசேனன்
ரங்கா ராவ்	...	உக்ரசேன மன்னன்
நம்பியார்	...	காலமதி
கருணாநிதி	...	அரமதி
மாதவன்	...	தெய்வாதீனம்
சகாதேவன்	...	சிவன்
நாகேஸ்வர ராவ்	...	சேனாதிபதி
ஏழுமலை	...	அரசாங்க வைத்தியர்
துரைசாமி	...	மந்திரி
பாலகிருஷ்ணன்	...	சிஷ்யன்
ராமசாமி	...	குறவன்
பந்துலு	...	பட்டர்

நடிகைகள்

சாவித்திரி	...	குணசுந்தரி
முத்து லக்ஷ்மி	...	ஹேமசுந்தரி
லக்ஷ்மி பிரபா	...	ரூபசுந்தரி
ருஷ்யேந்திரமணி	...	பார்வதி
கமலா தேவி	...	குறத்தி
மீனாக்ஷி	...	தாதி
ரஜனி	...	சிம்ம கன்னிகை
தனம்	...	மகர கன்னிகை
குமாரி துளசி	...	கமல கன்னிகை
சீதா	...	சிங்காரி
பேபி சாரதா	...	பால குணசுந்தரி
,, ஜயா	...	,, ஹேமசுந்தரி
,, நிர்மலா	...	,, ரூபசுந்தரி

ராமய்யாதாஸ், பலராம், கல்யாணம், லக்ஷ்மையா,
பேபி உமா, கோமளா மற்றும் பலர்.

பின்னிசை :

கண்டசாலா, ராஜா, சீர்காழி கோவிந்தராஜன்,
கிருஷ்ணன், லீலா, ஜிக்கி, ராணி, கமலா.

PRINTED AT THE B. N. K. PRESS LTD., MADRAS - 26

வருகிறது!

விஜயாவின்

மகத்தான புராணப்படம்

மாயா பஜார்

டைரக்ஷன் · K.V. ரெட்டி, B.Sc (HONS)

தயாரிப்பு · நாகிரெட்டி · சக்ரபாணி